திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு அதிகமான குழந்தைகள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றன. குழந்தைகள் வருகின்ற அளவிற்குத்தகுந்தாற்போல் எக்ஸ்ரே போன்றவை எடுப்பதற்கான பிலிம் போன்றவை பற்றுக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வருகின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் வைத்தியம் அளிக்கும் வகையில் தேவையான பிலிம் போன்றவைகளை சப்ளை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறுவதற்காக குழந்தைகள் அதிகமான அளவில் வந்தாலும், எக்ஸ்ரே படம் எடுப்பதற்கான வகையில் இருக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். பல்வேறு விதமான நோய்களுக்கு "டயகனேஸ்" பண்ணுகின்ற நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே, அந்த வகையில் அந்த ஆஸ்பத்திரியில் தேவையான பொருகள் நிறைவுடையதாகத்தான் இருக்கிறதென்று நான் கருதுகிறேன்.

Hosur Cattle Farm

* 552 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to introduce woolly type of sheep at Hosur cattle farm in Dharmapuri district; and

(b) if so, the variety of sheep proposed to be introduced?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) ஒசூர் கால்நடைப் பண்ணையில் சீமைக் கலப்பினப் பெருக்கத்திற்காக, ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் கிடாய்களை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும், ரஷ்ய மெரினோ செம்மறி ஆடுகளை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும் ஆய்வில் உள்ளன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அதேமாதிரி "ரெட் டேன்", "ப்ரௌன்", "ஸ்விஸ்" போன்ற மாடுகளை இறக்குமதி செய்து தமிழ்நாட்டில் அதிகமான அளவிற்கு இன விருத்தி செய்ய அரசு முன்வருமா?

1972 மார்ச் 18]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆட்டிலிருந்து அங்கத்தினர் அவர்கள் மாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆஸ்திரேலியா இனமான கொரிடேல் இனம், ரஷ்ய மெரினோ செம்மறி ஆடு ஆகியவைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதன் மூலமாக நம்முடைய ஆடுகளின் தரத்தை நூற்றுக்கு 50 பங்கு உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இறைச்சியின் தரம் உயருவதற்கும், கம்பளி அதிகம் கிடைப்பதற்கும் வழி காண முடியும். ஆகவே, இந்த இரண்டு இன கிடாய்களை தமிழ் நாட்டு இன ஆடுகளோடு தொடர்பு படுத்தி நல்ல ரக ஆடுகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the total number of such sheep supplied to the Hosur Cattle Farm?

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is only in the proposal stage and purchase has not yet been finalised.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த ஆடுகளை வளர்ப்பதற்காக உதவி ஏதாவது தருகிறார்களா? விசேஷ ஆடுகளை வரவழைத்து நமக்குத் தருகின்றார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து எந்தக் கால்நடை நம் நாட்டிற்குத் தேவையென்றாலும், மத்திய அரசின் மூலமாகத்தான் அது நடைபெற வேண்டும். மத்திய அரசிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் கிடாய்கள் 5 கிடைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவற்றை கொடைக்கானலில் உள்ள மன்னவனூரில் உள்ள பண்ணைக்கு வழங்குவதாக ஆலோசனை இருக்கிறது. அதேபோல் ஓசூர் பண்ணைக்கு ரஷ்ய இனமான மெரினோ பெற்றுத் தர வேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது ஓசூர் கால்நடைப் பண்ணையில் உயர்ந்த ரக ஆடுகள் என்னென்ன இருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, உயர்ந்த ரக கொரிடேல் கிடாய்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருப்பதாகத்

தெரிகிறது. தமிழ்நாட்டிற்கு எத்தனை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அப்படி ஒதுக்கவில்லையென்றால், தமிழ்நாட்டிற்கு அந்த இன ஆடுகளை ஒதுக்க வேண்டுமென மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் 5 கிடாய்களும், ரஷ்ய இனமான மெரினோ பல ஆடுகளும் தேவை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கும் என்பது தெளி வாகத் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இம்மாதிரி யான கால்நடைப் பண்ணைகள் ஆரம்பித்தவை சரியாக நடைபெற வில்லையென்று சொல்லப்படுகிறது. ஓசூர் பண்ணையாவது நல்ல முறையில் நடைபெறுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆடு இன விருத்தியைப் பொறுத்தவரையில் அது சாத்தூர் பண்ணையாக இருந்தாலும், சின்னசேலம் பண்ணையாக இருந்தாலும் இப்போது செம்மையாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அந்த இன ஆடுகள் பெருக்கம் எல்லாம் இந்தப் பண்ணை களில் மட்டும் நடைபெறுவதால் அதிக முன்னேற்றத்தைக் கண்டுவிட முடியாது. ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களின் மூலமாகவோ, தனியார் மூலமாகவோதான் அம்மாதிரியான ஆடுகளை வாங்கி இனவிருத்தி செய்வதன் மூலமாகச் சிறந்த பலன் விளையும். ஆடு வளர்ச்சியிலே இந்தத் துறையினர் சிறந்த தனிக் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Mechanised fishing boats

* 553 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned a scheme for grant of financial assistance to private people for purchase and operation of mechanised fishing boats; and

(*b*) if so, the details thereof and the total amount sanctioned to the scheme?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மீன்பிடி படகுகள் வாங்கவும், இயக்கவும், தனியார் தொழில் முனைவர்களுக்கு படகின் விலையில் 20 சதவீதம் வட்டியில் லாக் கடனுகை அரசு நிதியுதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.